# பதவி வெற்றிடம்

## தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை பிரிவில் தொழில்நுட்பவியல் அலுவலர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் மேற்கூறிய சேவைப் பிரிவில் உள்ள தொழில்நுட்ப அதிகாரி பதவி வெற்றிடத்திற்கு தகுதியான இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. ஆட்சேர்ப்பு தரம்** - III ஆம் வகுப்பு

**02. வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01** தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

**03. சம்பளம்** - பதவி நிரந்தரமானது, அ.நி.சுற். 10/2025 இல் MN-3 சேவைப் பிரிவிற்கான சம்பள அளவுத்திட்டமாகும்.

04. **தகைமைகள்**

**4.1.கல்வித் தகைமைகள்**

சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதம் அல்லது தொழில்நுட்பப் பாடப் பிரிவில் இணைந்த கணிதம், பௌதீக விஞ்ஞானம்,இரசாயனவியல், பொறியியல் தொழில்நுட்பம் அல்லது தகவல் தொழில்நுட்பம் உள்ளடங்களாக கணிதம் அல்லது தொழில்நுட்பப் பிரிவில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.(பொது ஆங்கிலம் மற்றும் பொதுத் தேர்வு நீங்கலாக)

4.2. **தொழில் தகைமைகள்**

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | தொழில் தகைமைகள் |
|---|---|---|
| 1.தொழில்நுட்பவியல் அலுவலர் (சிவில்) MN-3 | 01 | மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>தேசிய தொழில் பயிலுனர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்). |

| | | |
|---|---|---|
| | | அல்லது<br>தொழில் துறைக்குப் பொருத்தமான வகையில் தேசிய தொழில் பயிற்சித் தகைமை (NVQ) மட்டம் 6 க்கான தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல். (சிவில்)<br>அல்லது<br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களில் விசாரித்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லாவகையிலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல். |

**5.** அனுபவம் - பொருந்தாது

6. **உடல் தகுதி** - ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளைச் செய்வதற்கும் போதுமான உடல் மற்றும் மன ரீதியான தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. **வயதெல்லை** - விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு கூடாமலும் இருத்தல் வேண்டும்.

8. **ஆட்சேர்ப்பு முறைமை** - எழுத்துப் பரீட்சையொன்று மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையொன்றின்புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் முன்னுரிமை அடிப்படையில் வெற்றிடம் நிலவும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையிலானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

8.1.**எழுத்துப் பரீட்சை -**

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *தேர்ச்சி புள்ளிகள்* | *பாடப்பரப்பு* |
|---|---|---|---|
| *1.நுண்ணறிவுப் பரீட்சை* | *100* | *40%* | *----* |
| *2.விடயம் தொடர்பான தொழில்நுட்ப பரீட்சை* | *100* | *40%* | *1.கட்டிட நிர்மாணக் கலை வரைதல்கள்*<br>*1.1.கட்டமைப்பு வரைதல்கள்*<br>*1.2.பலப்படுத்தப்பட்ட கொங்கிரீட் தகட்டு அத்திவாரம், இரும்புக் காப்ப, தூண்கள் ஆகியவற்றின் கட்டமைப்பு வரைதல்கள் பற்றிய அறிவு*<br><br>*2. கட்டிடப் பொருட்கள் பற்றிய விபரம்*<br>*2.1. சீமெந்து, சுண்ணாம்பு, கொங்கிரீட் கல், செங்கல், பலகை, சக்கைக் கல், நிரப்பூச்சுக்கள் மற்றும் வார்னிஷ் வகைகள், பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி ஆகியவற்றைக் கட்டிட நிர்மாணப் பொருட்களாகப் பயன்படுத்தும் முறைமைகள் மற்றும் அவற்றின் தராதரம் பற்றிய அறிவு*<br>*3. கட்டிடப் பொருட்கள் அளவுத் திட்டத்தைத் தயாரித்தலும் மதிப்பீடு செய்தலும், அளவுத் திட்டப் பத்திரத்தைத் தயாரித்தலும் கட்டிட* |

| | | | |
|---|---|---|---|
| | | | *நிர்மாணத்துக்குத் தேவையான கட்டிடப் பொருட்களின் அளவு, தொழிலாளர் எண்ணிக்கை ஆகியவற்றை மதிப்பிடலும்*<br>*4. அளத்தலும் மட்டத்தைப் பெறலும்*<br>*4.1 சங்கிலி அளவீடு, மட்டத்தைப் பெறல், தியோடலயிட் பாவனை பற்றியதும் மேற்பரப்பு மேசை அளவீடு பற்றியதுமான அறிவு*<br>*5. கட்டிட நிர்மாணம்*<br>*5.1 அத்திவாரம், சுவர் கட்டுதல், பலகைக் கூரை, இரும்புக் காப்ப, தூண்கள், கொங்கிரீட் தூண்கள், அத்திவாரத்தட்டு, படி ஆகியன இடப்படும் முறைமைகளும் இடப்படும் சந்தர்ப்பங்களும்*<br>*6. கட்டமைப்புக்கள்*<br>*6.1 பெயர்ச்சி விசை, நெகிழ்ச்சி விசை வரைபுகள் ஆகியவற்றை அளவிடலும் நிர்மாணித்தலும்*<br>*7. சேவைகள்*<br>*7.1 மின்சாரம், நீர், சுகாதார*<br>*8. பாதுகாப்பு முறைமைகள்*<br>*8.1 வேலைத் தளமொன்றில் காணப்பட வேண்டிய பாதுகாப்பு முறைமைகள்* |

8. 2 **அதிகாரம் பெற்ற பரீட்சை நடாத்துனர் -** இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனம் (SLIDA)

விண்ணபத்துடன் உங்களது கல்வி மற்றும் தொழில்முறை தகைமைகளை நிரூபிக்கும் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட புகைப்படப் பிரதிகள் சமர்ப்பிக்கப் படல் வேண்டும். தமது தகுதிகளை நிரூபிக்கும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**9. பரீட்சை கட்டணம்** - பரீட்சை கட்டணம் ரூ. 600.00 தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் உள்ள இலங்கை வங்கி, பேராதனை கிளையின் 7040743 எனும் கணக்கு இலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

** பணத்தை செலுத்துவதற்கு முன்னர் கணக்கு இலக்கத்தை சரிபார்த்து உறுதிப்படுத்தவும். வங்கி பரிமாற்றம் மூலம் பணத்தை செலுத்துவதாயின் தெளிவாகத் வியங்கும் விதத்தில் வங்கி பற்றுச்சீட்டின் நகல் பிரதிளை இணைக்கவும். அதன் பின்புறத்தில், விண்ணப்பதாரரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பிக்கும் பதவி என்பன குறிப்பிடப்படல் வேண்டும். கட்டணம் ஒன்லைனில் செலுத்தப்படுமாயின் (Online Transfer எனின் screenshot) அல்லது விண்ணப்பதாரரின் விவரங்களை பற்றுச்சீட்டில் குறிப்பிட்டு பிரிண்ட் அவுட் எடுத்து அதை ஒட்டவும்

10. **ஏனைய** - இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான மேற்குறிப்பிடப்பட்டுள்ளதகைமைகள் 2026.04.06 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

11. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய முறை:**

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை (விண்ணப்பப் படிவம் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்ககளத்தின் www.botanicgardens.gov.lk என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்) 2026.04.06 ஆம் திகதிக்கு முன்னர் ”பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், தபால் பெட்டி இல 14, பேராதனை” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் மேல் இடது மூலையில் **“தொழில்நுட்பவியல் அலுவலர்** (சிவில்) **பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்** - 2026**”** எனக் குறிப்பிடல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்.
தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்,
பேராதனை.

2026,மார்ச் 17 ஆம் திகதி

விசாரணை : 0812388654

.